මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/62** **2025.04.21**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

### அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தேவையான செல்லுபடியான அடையாள அட்டைகள்

2025.05.06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக அஞ்சல் மூலம் வாக்களிக்க பின்வரும் அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்றைச் சமர்ப்பித்து தனது ஆளடையாளத்தை உறுதிசெய்வது ஒரு கட்டாயத் தேவை என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

I. தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;
III. செல்லுபடியான கடவுச்சீட்டு;
IV. தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை;
V. தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தகவல்களை உறுதிசெய்யும் கடிதம்;

02. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு அலுவலகமுறை அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற போதும், கடந்த தேர்தல்களை அடுத்து அது சம்பந்தமாக அறியக் கிடைத்த விடயங்களையும் கவனத்திலெடுத்து, இத்தேர்தலின் போது அஞ்சல் வாக்காளர்கள் தமது அலுவலகமுறை அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதாயின், அத்தகைய அஞ்சல் வாக்காளரை அடையாளம் காணல் அன்றேல் ஆளடையாளத்தைப் பரிசோதித்தல் மற்றும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் பணி தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நியமிக்கப்பட்டுள்ள அலுவலரினால் மேற்பார்வை செய்யப்படும். அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில், அலுவலகமுறை அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கின்ற அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடாதென்று அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்